1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லை யென்றாலும், டாக்டர் அம்பேத்கார் பெயரில் கல்லூரிக்கு முயற்சி யெடுக்கப்பட்டு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து அந்தக் கல்லூரி துவங்கப்படலாம்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஜாதியின் பெயரால் எத்தனை இயங்குகின்றன என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தாலும், இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரத்திற்கருகில் உள்ள மன்னன்பந்தல் என்றயிடத்தில் ஏ.வி.சி. கல்லூரி இயங்கி வருகிறது. அங்கே குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும், அவர்களுக்கு மார்க்குகள் குறைவாகயிருந்தாலும் அதிகச் சலுகைகள் தரப்படுகின்றன என்பதும், அதே நேரத்தில் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்குகள் அதிகமாகப் பெற்றிருந் தாலும்கூடப் புறக்கணிக்கப்படுகிறார்கள், சேப்பதற்கு மறுக்கப் படுகிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாணவர்களைச் சேர்ப்பது, மற்றவைகளிலெல்லாம் பல்கலைக்கழகம் தான் தலையிட வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு இந்தக் குறை பாடுகளை எழுதி அனுப்பினால் பல்கலைக்கழகம் அதற்கு விளக்கங்களைக் கேட்க முடியும். நாம் எல்லாக் கல்லூரிகளுக்கும் சொல்வது, குறைந்தது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவிகிதமும், பிற் படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம் ஆக 49 சதவிகிதம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்ற அந்தத் தாக்கீதை பல்கலைக் கழகத்தின்மூலம் எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக் கிறது. அதற்கான அறிக்கை தரவேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கிறது. அந்த அறிக்கை எல்லாக் கல்லூரிகளிடத்திலும் கேட்கப்பட்டிருக்கிறது.

[1973 பிப்ரவரி 12

பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள்

* 123 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சாதாரண மைனர் பஞ்சாயத்துகளில் இம்மாதிரி அதிகாரிகள் இல்லாத காரணத்தினால், எல்லா ஊராட்சி மன்றங்களிலும் அல்ல, பல ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் செக்குகளில் தன்னிஷ்டப்படி கையெழுத்துப்போட்டு பணத்தை எடுத்து அந்தப் பணத்தை ஒழுங்காகப் பஞ்சாயத்திற்குச் செலவிடாமல் தங்களுடைய சொந்த நலன்களுக்காகச் செலவிடு கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு அதிகாரி என்று இல்லா விட்டாலும்கூட, நான்கைந்து மைனர் பஞ்சாயத்துக்களை ஒன்றாகச் சேர்த்தாவது ஒரு நிர்வாக அதிகாரியை விரைவாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய எல்லாக் கருத்துக்களும் ஆராயப்பட வேண்டியவையாக இருக்கின்றன. அரசு இதைப்பற்றி பரிசீலித்து வருகிறது. இப்பொழுது சில ஊராட்சி மன்றங்களில் வருமானமே 900 ரூபாய், 1,000 ரூபாய், 1,600 ரூபாயாக இருக்கிறது. அங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்குப் போதுமான அளவிற்கு அவர்களுக்கு வருமானம் ஏற்படவில்லை. சட்டதிட்டத்தின்படி பேரூராட்சி மன்றங்களில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும்பொழுது அங்கேயிருக்கும் தலைவருக்கு செக்குகளில் கையெழுத்துப்போடும் உரிமை வராது. நிர்வாக அதிகாரிக்குத்தான் அந்த உரிமை வருகிறது. ஆனால் சிற்றூராட்சி மன்றம், ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் மட்டுமேயிருப்பதால், அவர்கள் சாதாரணமான முறை களில் பகுதி நேர எழுத்தர்களை வைத்து, 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் சம்பளமாக வழங்கப்படுகிறது. செக்கில் கையெழுத்துப் போடும் உரிமை, சட்டத்தின் 40 (2) விதியின்படி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆகவே, செக்குகளில் கையெழுத்துப் போடு